2026 –பிப்ரவரி மாதம் 19–ஆம் தேதி வியாழக்கிழமை.
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 328/2024*

*2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19–ஆம் தேதி வியாழக்கிழமை. மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. K. மனோரஞ்சிதம், Gr.II Bench Clerk அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | RW1, ஜீவானந்தம் |
| தந்தையார் பெயர் | : | கோவிந்தராஜ் |
| ஊர் | : | கிருஷ்ணாபுரம் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | நடத்துநர், TNSTC, பெரம்பலூர் |
| வயது | : | 39 |

**தேதி: 19.02.2026**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன். நான் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

விபத்து சம்பவம் குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். பொதுவாக நாங்கள் பேருந்தை இயக்குவதற்கு முன்பாக பேருந்தின் அனைத்து சக்கரங்களையும் சோதனை செய்த பின்னர்தான் பேருந்தை இயக்குவோம். விபத்து சமயத்தில் பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் மீதுதான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுநர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. மனுதாரர் மேற்படி பேருந்தில்தான் பயணம் செய்தார்

என்றால் சரிதான். எங்கள் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் எனவே எங்கள் நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:— இல்லை.**

**ஒப்பம்/-கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**